23477
(8480)
Dr. U. V. S. IYER LIBRARY ★ MADRAS-90 ★

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# திருவேட்டீசுவரர் கலம்பகம்.

இஃது,

திரிசிரபுரம் பிரும்மஸ்ரீ,

திரு - அ - சிவாநந்தசாகர யோகீசுவரரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை,

திருவேட்டீசுவரர்பேட்டை

ஸ்ரீவாதபுரீசபாதசேகர பக்தஜனசபையாரால்

வெளியிடப்பட்டு,

ஸ்ரீராம விலாச் முத்திராக்ஷர சாலையில்,

அச்சிடப்பட்டது.

சௌமிய ௵ ஆவணி ௴

இதன் விலை அணா. ௧.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

இந்நூல் அநேக வருடங்களுக்குமுன் பாடப்பட்டதுபோல் காணப்படுகிறது. இதனையாக்கியோர் பெயர் முதலியவை ஏட்டுப் பிரதிகளிலும், விசாரணையிலும் தெரியவில்லை. திருவல்லிக்கேணி ஆபீஸ் வெங்கடாசல முதலியார் வீதியிலிருந்த பூ. வெங்கடாசல முதலியாரவர்களால் கிடைத்த வெகுநாளைய ஏட்டுப்பிரதியையும் அதன்பின் கிடைத்த இரண்டு பழைய பிரதிகளையும் ஒத்திட்டுப் பார்த்து, அவற்றுக்கு மாறுபடாமல் திருத்தி இப்போது வெளியிட்டமையால், இதில் ஏதாவது பிழைகளிருந்து வித்துவான்கள் தெரிவித்தால் வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கின்றோம்.

குறிப்பு:—மயூரகிரிசைக் கொச்சகக் கலிப்பா முதல், நேரிசையாசிரியச் சுரிதகம் வரையுள்ள பாடல்களை, ஒரேபாடலாகக் கொள்ள வேண்டும்.

இப்புத்தகம் வேண்டுவோர் அடியிற்கண்டவரிடம் விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

தி. முத்துராமபிள்ளை.

நெ. 37, பிள்ளையார்கோவில் தெரு

திருவேட்டீசுவரர்பேட்டை

சென்னை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவேட்டீசுவரர் கலம்பகம்.

Dr. U. V. S. IYER LIBRARY MADRAS
8480
23477

## காப்பு.

வையகமெண் சந்த வனத்திருவேட் டீச்சுரர் மேற்
றுய்ய கலம்பகப்பாச் சொற்றமிழ்க்குத் - தைய
லிடத்தானத் தானைமுக னீன்றருளு மூன்று
கடத்தானத் தானைமுகன் .காப்பு.

## நூல்.

### மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா - தரவு.

நீர்மேவு புயலனைய நெடுங்கூந்தற் கலைமகளை
வார்மேவு முலைத்திருவை மதர்விழியாற் பணித்தருளு
மலைமகளை யொருபுறத்தின் வைத்துலக மளித்தருளி
யலைகடனஞ் சமுதாக வருந்தியகல் விசும்புறையும்
வானோரு முனிவரரு மதிநலக்கும் புருடருட
னேனோரு மனங்களிகூர்ந் திறைஞ்சிமிக வாழ்த்தெடுத்து
மருவேட்டின் மலர்தூவ வான்றொடு சண்பகவனத்திற்
றிருவேட்ட நாதனெனச் சிறந்தினிது வீற்றிருந்தோய். (1)

### இவையாறு மீரடித்தாழிசை.

விண்ணோங்கு மணிப்புனலை விரிசடையிற் றரித்தருளி
மண்ணோங்கு மொருவேடன் வாய்ப்புனலும் விரும்பினையே
முலைத்தழும்பும் வளைத்தழும்பு முன்வாய்த்த தமையாமே
சிலைத்தழும்பு மொருவிசயன் செங்கையாற் பெற்றனையே
வற்றாகருணை வடிவான வானவனீ சிறுத்தொண்ட
னின்மகவின் கறியருந்தற் கெந்தவா றிசைந்தனையே
பாக்கியநா ரணனயனப் பதுமமலர் புனைபாதத்திற்
சாக்கியனா ரெறிகல்லுந் தண்மலராய்க் கொண்டனையே
கயற்பகையார் கண்ணியுமை கலந்திருந்து மிடப்புறத்தி
லியற்பகையார் தம்மனையை யீகெனமுன் கேட்டனையே
யோரடியைப் பாண்டியனு முடையவனீ யடியவருக்
கீரடியைப் பணிக்கின்று மிந்தவித மிறும்பூதே. (2)

### இவை நான்குப் ஈரடி அராகம்.

திரைகடன் முரசுள சிலைமத வெதிர்கொடு
விரைவினி லடுகணை விடவெரி சிதறினை
வெடிபட வதிர்குரல் விறன்மிகு மறலியை
அடியெனு முளரிகொ டவனியி லிட்டினை
பொலிநவ மணிமுடி புனைதச முகனது
வலிநிலை கெடவடி மணிவிர னிறுவினை
மிடல்கெழு முனிவரர் விடவரு முயலக
னுடலது நெரிபட வடனடி சரணினை.. (3)

### இவை நான்கு மீரடித்தாழிசை.

மாலும்வே தனுமறியா மணிமுடியுஞ் சேவடியுஞ்
சாலநோ யுறவிறகு தலைச்சுமந்து நடந்தனையே
மறைமுடிக்கும் விண்ணோர்த மணிமுடிக்கு மெட்டாநீ
யிறையடிக்கு மண்டபத்து ளொளியவர் போற்சென்றனையே

மெய்ப்பொருளா யெப்பொருட்கு மேலான முதற்பொருணீ
பொய்ப்பொருளு மெய்ப்பொருளும் பொருளாக விதித்தனை
[யே
உலகுதனி னின்விளையாட் டொருநான்கோ டறுபதென்ப
ரலகிலநின் றிருவிளையாட் டடியேனென் சொலற்பாற்றே.(4)

இவை யீரடி யிரண்டம்போதரங்கம்.

தரைநீர் கனல்காற் றிடல்வி சும்பும்
பரவுக திரிந்து வியமான னுயிரினை
கனலா டியநின் கழலிணை பணியஞ்
சனகா தியர்க டம்மைப் புரந்தனை (5)

இவை நான்கும் முச்சீரடியம்போதரங்கம்.

படவர வரையி லசைத்தனை
பழமறை முழுது மிசைத்தனை
வடவரை நெடுவில் வளைத்தனை
மணிவரை யிடையின் முளைத்தனை. (6)

இவை யெட்டும் இருசீரடியம்போதரங்கம்.

கடையி கந்தனை
விடை யுகந்தனை
கரி யுரித்தனை
புர மெரித்தனை
படி புரந்தனை
மிடி துரந்தனை
பணி யடுத்தனை
பிணி கெடுத்தனை (என வாங்கு தனிச்சொல்.)(7)

## இவை பதினான்கடி நேரிசையாசிரிய சுரிதகம்.

மூவர் பாடலு மொழியுநான் மறையுந்
தேவர்தந் துதியுந் தினந்தின முழங்கும்
மருவளர் சண்பக வனமெனச் சிறந்த
திருநக ரமர்ந்த திருவேட் டீச
முத்தி நாயக மூவா முதல்வ
வத்தநிற் பரவி யடியனேன் கேட்பது
வாரமொன் றானதான் மலரயன் பதமுங்
கரியமால் பதமுங் கனவிலும் வேண்டிலம்
முண்டத் திலங்கிய வெண்டிரு நீறுங்
கண்டத் தணிதரு கண்டிகை மாலையுந்
தரித்த மெய்யடியார் தமையெதிர் காணி
னருத்தி யுற்றுரோம பங்கம் பொடிப்ப
விதய நெக்குருகி யிறைஞ்சி
பதாம்பர் போற்றப் பணித்தரு ளெமக்கே. (8)

### வெண்பா.

எம்பிரானை வானத் திமையவர்கள் போற்றவரு
தம்பிரா னீசந் தனவனத்தி - னம்பன்
திருவேட்ட நாதனடி சிந்தித்தார் மீண்டுங்
கருவீட்டில் வந்துதியார் காண். (9)

### கட்டளைக்கலித்துறை.

காணாமின் றுயைம் பூசவெண் ணீற்றினைக் காதலித்துப்
பூணவொண் கண்டிகை சந்தா டனியிற் புனிதனைப்
பாணியி னற்றெழு மாட்டா திறமார்ந்த பாவலரும் [ரே.()
வீணைாப் போர்நின்ற சிந்தா மணியென்பர் விண்டென்ப

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

விண்டிருக்கு மலர்த்தடஞ்சூழ் சந்தவன மேவுதிரு வேட்ட நாதர், புண்டரிகத் தாளிடத்திற் பூந்துளவ நறுமாலை புனையுஞ் சென்னி, கொண்டணிறத் தவனைக்கங் கண்டுகொண்டிந் திரன்றவஞ்செய் கொள்கை யாலே,மண்டலத்திலவன் கற்பாற் சிறந்தவனென் றுலகமெலா மதிக்குந் தானே. (11)

விருத்தம்.

மதியார் புரமே யடுவெண் ணகையார்
மழுமா னுடையார் தொழுவானோர்
துதியார் சடைமே னதியா ரிதழித்
தொடையார் விடையார் மலர்மாதின்
பதியா ருறைவா ரவர்வீ டுடையார்
பணியா விடினும் பகரவ்வூர்
மிதியா ரெனிலங் கவரே பவனைப்
வீழ்வார் நரகிற் றாழ்வாரே. (12)

சந்தவிருத்தம்.

தாதுண்டு வண்டுலவு தேனுந்து கொன்றைமலர்
தமைமேபெற்ற வேணி யரனார்
நீதென்ப தொன்றமிலர் மாவின் புரக்குடிகொள்
திருவேட்ட நாதர் தமைநீ
பேர்தென்ப துண்டுபுனை நாவென்ப துண்டுது தி
புரிபாக்கிய் மேவு நெடுவான்
மூதண்ட ரும்பரவ வாழுந் திறம்பெறுவை
மொழிகேட்டி யேழை மனமே. (13)

## புயவகுப்பு.

மண்டிவரு முப்புரமு மன்றுபொடி பட்டெரிய
மலர்விட்டு மாதுபுணர் கணையைத் துரந்தன
வண்டுபுடை சுற்றவகல் கின்றகரடக் குறியின்
மதமூற்று வேழமுரி தொழிலைப் புரிந்தன
மன்றணிலை பெற்றவுல கெங்கணு மளப்பரு
மதுவாய்த்த மாமதலை யணியாச் சுமந்தன
வஞ்சமன வக்ரனொடு பண்டுதிரு வக்கரையின்
மலியாற்ற லொடிகலி யமரைத் துரந்தன
அண்டர்வெரு விக்கதற வெண்கிரியெ னப்புரளு
மலைமேற்கொள் வேலைவரு கடுவைக் கவர்ந்தன
அன்புடைய வப்பரொடு சுந்தரர் திருப்புகலி
யவர்சாத்து மாமதுர கவியைப் புனைந்தன
அங்கையயில் பெற்றவனும் வெங்கய முகத்தவனு
மடியேற்று வீறுநடை பயிலச் சிறந்தன
அஞ்செவியி லிட்டவர வின்கண பணத்தின்மணி
யவைதோற்று பேரொளியின் முழுகித் திகழ்ந்தன
எண்டிசை மதிக்குமொரு தொண்டர்மத லைக்கறியை
யினிதாக்கி யேயிட்டு மதுதொட் டளைந்தன
இந்துநில விற்றிகழும் வெண்பொடி திளைத்துமிக
வெழில்பூத்த மாகயிலை மலையொத் திலங்கின
இன்றமிழ் மணக்கவிசை தங்குமது ரைக்குண்மயி
லியலார்க்கும் வால்வளைக ளிடுதற் கிசைந்தன
இந்திர னறைக்கமல மந்திரல் வழுத்துகதி
ரிடர்தீர்க்கு மாயனிவர் பரவத் தழைந்தன
திண்டிறல் படைத்துள புயங்கவல யத்தைய நு
தினமாட்சி யான்மருவி யழகிற் பொலிந்தன
செங்கய லினைக்கறுவி யொண்குழை களைத்தடவு
சினவேற்க ணுரியுமை தழுவக் குழைந்தன

சிந்தையுரு கிக்கசிய வந்துபர வித்தொழுது
திரிவோர்க்கு நாளும்வள ரருளைப் பொழிந்தன
செண்பக வனத்தில்வரு நம்பர்கரு ணைப்பரமர்
திருவேட்ட நாதரவர் சிகரப் புயங்களே. (14)

வெண்பா.

புயங்கவிட நோய்தருங்கட் பூவையர்க்கு மாலாய்
மயங்கவிட வேண்டாங்காண் வானிற் - றயங்குமதிச்
சந்தா டவிமேய சாமியெனக் குன்பாதந்
தந்தா டவியாமற் றான். (15)

கட்டளைக்கலித்துறை.

தானே தனக்கு நிகரானவர்சந் தனவனத்திற்
றேனே யனையசொற் சண்பகவல்லித் தெரிவைபங்கர்
மானே திகழ்கைத் திருவேட்ட நாதர் மலர்ப்பதத்தை
நானே பணிவ னெனக்குமுண் டோசொ னமன்பயமே. (16)

சந்தவிருத்தம்.

பயமிகத் தருமருப் பதிர்குரற் சினவிழிப்
பகடுகைப் பவனைவைத் ததுமனத் தழிகிலீர்
கயமருப் பிணைமுலைச் சிலைநுதற் கயல்விழிக்
கணிகையர்க் கிதம்வரக் கலவியிற் சுழலுவீர்
அயன்மிகப் பரவுலட் சுமிபுரத் திறையடிக்
கலரையிட் டினியருச் சனையினைப் புரிமினீர்
சயமுடைச் சுரர்தொழக் கயிலையிற் சிவகணத்
தலைமைபெற் றுறைவிரித் தகமைசத் தியமதே. (17)

மடக்கு.

சத்த மருவானுஞ் சத்த மருவானுந்
தங்க மலையானுந் தங்க மலையானும்

மத்த முடியானு மத்த முடியானு
மாவிடத்தி னானு மாவிடத்தி னானுங்
குத்திரமுள் ளானுங் குத்திரமுள் ளானுங்
கோலமறியானுங் கோல மறியானும்
அத்தி யுரியானு மத்தி யுரியானு
மார வனத்தானு மார வனத்தானே. (18)

கட்டளைக் கலித்துறை.

ஆனே றுகைத்திடுஞ் சந்தவனேச ரறுபதத்தின்
தேனேறு கொன்றைத் திருவேட்ட நாதரைச் சேவித்தபேர்
மானேறு கையின ராவார் பிறர்பவ வாரிகரை
யேனேறு வார்கிர யத்தெரி தீக்கவ ரிந்தனமே. (19)

சந்தவிருத்தம்.

இந்துபுனை வேணியின ரெங்களுயிர் போல்வார்
சந்தவன மேவியவர் தண்புனலின் மூழ்கின்
வெந்திறலி னேனைமனை வென்று விடையேறு
மெந்தை பெருமானுலகை யின்று பெறுவீரே. (20)

கட்டளைக்கலித்துறை.

பெறுவீர்மெய்ஞ் ஞானத்தைப் பெற்றழி யாமுத்தி பெற்றுநி
துறுவீ ருலகத் தவர்காண் மதனை யுருத்தமுன்னங் [யா
தெறுவீர ஞர்சந் தனவனத் தீசர் திருவடியில்
நறுவீர நாண்மல ரிட்டிறைஞ்சிப் பத்தி நண்ணுதிரே. (21)

விருத்தம்.

நண்ணியபுன் முதலாக மானிடமென் றீறுக
நவிலா நின்ற
மண்ணுலகி லுள்ளவெலாம் பிறந்திளைத்தே னினிப்பிறக்க
மாட்டேனையா

பண்ணுலவு தமிழ்மணக்குந் தண்பசா டவிவாழும
பரனே சுத்தக
தெண்ணிலவை யணிசடையாய் சிந்தியார் மனக்கமலந்
தேங்குந தேனே (22)

### இரங்கல்.

தேனிவர் கொன்றையர் மானுல வங்கா செகமேழும்
வானுல குந்தொழ நீடியசண்பக வனமேவாழ்வோர்
கானவ னன்றுத வூனை யுகந்தவர் கனிதானே
மானு மெனுந்திரு வாயமு துண்டில னடமாதே (23)

### தரவு-கொச்சகக்கலிப்பா-இரங்கல்.

மாதருக்குக் கூடலில்லை வளையலிட்டார் வெள்ளைவிடை
மீதிருக்குஞ் சந்தவன மேவுதிரு வேட்டீசர்
சூதிருக்கும் வனமுலையீ ராதிதனைத் தெளியேன் றொழுதுநின்ற
போதிருக்கும்வளைத் தலைமுப்போ தகவிட் டார்காணுமே.(24)

### சந்த விருத்தம்

மேவுகழை மேற்றவி வாழைமிசை மேற்றவி
வேலிகளின் மேற்றவி நெடுவாளை.
வாவியிடை போய்ச்செரு மாகமலை யூர்க்கோயில்
வாசர்திருவேட்டீச ரெனைமேவார்
பாவமதி யாற்றுயர் பெருகவசை யாற்செல்கள
பாய்கட லினாற்காவி லகலாதே
கூவுகுயி லாற்காம னேவுகணை யாற்காதல்
கூரவளர் வாய்த்த தெனன்மடமாதே (25)

### விருத்தம்.

மடியார் பிறவார் நெடியோனும
மறைவே தியனுந் தேடுமறை

முடியார் செழுஞ்சந் தனவனத்தார்
முதல்வர் திருவேட் டீசர்பணி
தொடியார் சரணே சரணமெனத்
துணிந்து தொழுதே தவம்புரியு
மடியா ருறையும் வீடேவீ
டல்லா வீடு படைவீடே. (26)

கலித்துறை.

படைத்திடு நான்முகப் பண்ணவன் றந்தை பரவுகட
லடைத்ததல் லாற்கடந்தானில வூற்பவ மாங்கடலை [ங்
துடைத்தெவை யுந்தந் தருளசண்ப காடவித் தோன்றுசிவ
கடைக்கண் ணருட்புனை பெற்றார்கட் பார்மெய் காண்மன
மே. (27)

தாழிசை.

மேருவைத்தொடு கர்த்தர் வஞ்சிதன்
மேருவைத்தொட நினைக்கிலார்
வீறு கூடல் வளையிட் டவைப ரிவண்
மென்கை மேல்வளை யுறச்செயார்
பாரமானவரை யாத ரித்தபரர்
பாவை யல்குல் வரையிச்சியார்
பண்டு வேடனிடு வூன்வி ருப்பர்திகழ்
பவளவா யமிர்த முண்டிடார்
நீரை வேணியி லடக்கி னோ ரிவை
நெடுவி ழிப்புன லடக்கிடார்
நிறையு டைப்பரவை மனைபெருந் தருளு
நிமலரென் மனையில் வந்திடார்
தேரு லாவுமணி மாட வீதிசெறி
செண்ப காடவியி லீசனார்
திருவுளச் செயலை யறிய வாணிலுறை
தேவ ருக்குமிக வரியதே. (28)

### வண்டுவிடு தூது-கலித்துறை.

தேதேயென் றாடித் திரிந்திடு மோசெந் திருநகர்ப்பூந்
தாதே யருந்தி மறந்திடுமோ கொன்றைத் தார்க்குவிட்ட
தூதே நினைந்து புகன்றிடு மோதொழுந் தொண்டருக்கப்
போதே யருளுந் திருவேட்ட நாதர்முன் போனவண்டே.(29)

### கொச்சகம்.

வண்டுலவுஞ் சந்தவனம் வாழ்திருவேட் டீசர்தமைக்
கண்டுதொழு வார்தாங் கடவுளரா வார்மெய்யே
விண்டயன்வா னோர்பணிய மேவுபவ னிக்குளெதிர்
கொண்டுசென் றேனிமையாக் குணம்பெற்ற திருவிழியே.(30)

### மட்டு விருத்தம்.

இருபிறப்பு மொருபிறப்பு முன்மூவர் தமிழ்வினவா
யெவர்க்கும் வேதன்
தருபிறப்பை யொழித்துவிடுஞ் சண்பகா டவிவணங்காய்
தரையிலென்று
மொருபிறப்பு மில்லாத திருவேட்ட நாதரடி
யுகந்து போற்றாய்
வருபிறப்பில் லாதமுத்தி யெந்தவித மடநெஞ்சே
மருவு வாயே. (31)

### காலம்.

மருவைமிக வுளமுல்லை யலர்மணக்குங் காலம்
வல்வினையே னுளமுல்லை யலர்மணக்குங் காலம்
பொருதொழி லேந்தாமத னம்புதைக்குங் காலம்
பொலிபச லேங்காமக னம்புதைக்குங் காலம்

திருவணங்குஞ் சாணரறு திணம்பெருமங் களத்தில்
செண்பகா டவிப்பரமர் திகழ்ந்திடு மங்களத்தில்
கருமைபடைத் திடு முகிலங் கம்பனிக்குங் காலம்
காதலர்தம் பிரிவாலெங் கம்பனிக்குங் காலம். (32)

விருத்தம்.

காலனைக் கடிந்து வாசங் கமழ்மது துளிக்கும் பைம்பூங்
கோலனைக் கடிந்து நீலக் கோலமா லோங்கி பூத்த
பாலனைக் கடிந்து வீறு படைத்தசன் பகவ னேசர்
வேலனைக் கடிந்த தோகை மேவுமால் கடிந்திலாரே. (33)

விருத்தம்.

கடி தரிப்பது மாதங்கத்தையே கலந்திருப்பது மாதங்கத்தையே, பொடிதரிப்பது மத்தனுகமே புனைந்திருப்பது மத்தனுகமே, குடியிருப்பது மாபுரத்திலே கோல்விடுத்தது மாபுரத்திலே; யடியிருக்குநான் முடிவிடத்தையே யருந்து மன்பிலான் முடிவிடத்தையே. (34)

வெண்பா.

எடவிழ்பூங் காவி லிருந்தகிளி மூவர்தமிழ்
பாடலுரா கப்பூவை பாடுமுறை - நாடிலொன்று
மாசடையான் தூய மதியுநதி யும்புனைந்த
மாசடையான் சந்த வனம். (35)

விருத்தம்.

வனத்திற்கமலைத் துறைவண்டே வரிவால்வளையே மடக்குருகே, கனத்தைத் தொடுதென் மலைத்தென்றற் காற்றெனும்போர்க் கணம்போழ்ந்து, மனத்திற் றுயர்கொண் டிறைவர்சந்த வனத்திற் பரமர்மருவாம, லினத்திற் பிரிந்தமான் போலிங் கிருப்பேனென்று மிங்குவந்தே. (36)

அம்மானை.

இந்திரைசேர் சந்தவனத் தெய்து திருவேட்டீசர்
சந்ததமுஞ் செங்காவி தரிப்பார் காணம்மானை
சந்ததமுஞ் செங்காவி தரிப்பாரே யாமாகில்
தந்தலையிலோர் பெண்ணைத் தாங்குவதே னம்மானை
தாங்கினது கேட்கிற் சலமலவோ வம்மானை. (37)

கலித்துறை.

அம்மானை யாக வெடுத்தண்ட மாடு மம்மையிடப்
பெம்மானைச் சந்த வனத்தெம் பிரானையிப் பேருலகிற்[ரைப்
கைம்மானைப் பண்டுரித் தோனைத் தொழாநிற்குங் கைத்தல
பொய்ம்மானை யெய்தொரு மெய்ம்மானைத் தோற்றவர்போற்
[றாவரே. (38)

விருத்தம்.

வரைய டுத்த நித்த முக்கண் வள்ளல் சண்ப காடவிப்
பரைய டுத்த வாம பாகர் பதநி னைந்து நிற்பிரேல்
நரைய டுத்தி டாது மூப்பு நலிய நாளு மெய்யினிற்
றிரைய டுத்தி டாது மிக்க தேவ ராயி ருப்பிரே. (39)

மேகவிடுதூது-தாழிசை.

இருள்ப டைத்த வவனி சுற்று முற்றி முற்று மூண்டுகொண்
டெழிலு டைத்த டித்து விட்டி டித்தெ ழுந்து மிகவுநண்
பொருள்ப டைத்த சுருதி முற்று ணர்ந்த ஞான நான்முகன்
பெற்ற தந்தை யெனநலம் புரக்க வந்த கொண் டல்காண்
மருள்ப டைத்த மதிப டைத்து வாடுகின்ற வெந்தன் மேல்
மாரன் வீர வாளி யான்மலர்தொ டுக்கு முன்னமே
யருள்ப டைத்த விறிப டைத்த வமலர் சண்ப காடவி
யற்புதத்தர் பொற்பு யத்தி லணியல் பெற்று வாருமே. (40)

வெண்பா.

வாராய் மனமே வளர்சண்ப காடவிபி
லாரார் சடையருக்கா ளாகாமற் - சீராருஞ்
சேல்வேலை வென்ற திருநெடுங்கண் மாதருள
மால்வேலை யாழ்கியலை வாய். (41)

கலித்துறை.

அலைவாய் வளைகள் பலசிந்து வாயல ரம்பெய்துவாய்
நிலையாகு மாரனுக் காவமு மாயினை நீண்டவெற்புச்
சிலையார் மலர்ச்சண் பகாடவி யீசனைச் சேரவென்போற்
றொலையாத மோகத்தைக் கொண்டனையே சொல்சுழிகட
லே. (42)

வெண்பா.

கடல்புடைசூழ் சந்தவனக் கண்ணுதலார்க் கொப்பார்
மடவினையூர் சிந்தையளாய் வாடு - முடலின்
கனியிதழின் மாலைக் கருதியருள் செய்தோர்
தனியிதழி மாலிகையின் றார். (43)

இவை நான்கு மீரடித்தாழிசை-மறம்.

தாரிருக்குமிரு தோளின் வாளரசு
தான்விடுக்கவரு தூதகேள்
சௌபரிக்குமட மகளிரைம் பதின்மர்
தம்மையன்றுதவு மன்னர்போல்
வாரிருக்குமுலையார் வழுத்து குண
மகிமையுள்ளகுல மாதரை
மறவரன்னியர் தமக்குளீந்தகதை
வையகத்திலுள தோசொலாய்

சீரி ருக்குமலர் மங்கை பூசனைசெய்
செஞ்ச ரோருக பதத்தினர்
செவ்விய காடவியி னம்பரைத் தொழுதல்
செய்யுமெம் பெருமை யறிகிலீர்
ஆரி ருக்குமயில் விழியொ ருத்திதனை
யையவர்சேர் நிருபர் மரபிலே
யார்கொ டுப்பர்மட வாரை வாழிறைவ
ரவர்ந டக்கையுல கறியுமே. (44)

### மடக்கு-கட்டளைக்கலிப்பா.

மேரு வெற்பை வளைத்தது பாணியே
வேணி வைப்பதும் வேணியர் பாணியே
தேரி னன்மறை யாம்பொற் புரவியே
திருக்கண் ணுருஞ் செழும்பொற் புரவியே
யோரி னேற்றென வூர்வது மாலையே
புனைந்து கொள்வதும் பூங்கொன்றை மாலையே
தாரு காவன மென்பசஞ் சாரமே
சங்க ரர்க்கிடங் கெத்திர சாலமே. (45)

### கட்டளைக்கலிப்பா.

சாதி யான விருபிறப் பாளனர்
சண்ப காடவி நம்பர்கங் காளனை
ரேதி லாவொருஞ் நீசனைத் தம்முளே
யேக மாகக் கலந்தன ராயினு
மாதி நான்மறை யோர்கடம் வேள்வியி
லவனை வைத்தவிப் பாகம ளித்தலாற்
கோதி லாத பெரியவர் செய்திடுங்
குற்ற முங்குண மென்னக் கருதுமே. (46)

### கட்டளைக்கலிப்பா குறம்.

கருத்தறிந்து குறிசொல் குறத்திநான்
கைக்கு ழந்தைக்கென் கையினி லெண்ணெய்வார்
பருத்தி யாடையி லோர்முழங் கொண்டுவா
பலிக்கு மென்குறி பாரினிற் பொய்க்குமோ
மருத்து ழாய்வனத் தங்கை பெறும்பொருண்
மங்கை யேசண்ப காடவி மேவிய
வெருத்து கைத்த திருவேட்ட நாதர்முன்
னெய்தி முற்றும் படைத்தினி வாழ்வையே. (47)

### கழிக்கரை புலம்பல்-தாழிசை.

வர்னைப்பொரு பனையேபல மீனிற்கிளர் பனையே
மணிவிற் கெழுமலையே நெடுவானிற் கெழுமலையே
பானற்றுணர் வனமே கழியார் கோமள வனமே
பருமுத்துமிழ் கோடே புனல் பாயம்பலகோடே
வேனிற்கிறை யம்புந்துணை விழியே சொரியம்பும்
மென்கொங்கையி லுறவே மிக மெலிகின்றன ளுறவே
தானித்தழு மதியார்புனர் சடைமேலணி மதியார்
தண்சந்தன வனவீரர் தமக்குச் சொலுவீரே. (48)

### கலித்துறை.

சொல்லா னதற்கு மிகத்தோற்ற பூங்கழை துட்டமதன்
வில்லாய் நமையின்று வாட்டுங்கொ லோமணி மேடையினிற்
செல்லார் திருச்சண்ப காடவி மேவிய தேவர்பிரா
னல்லாது மற்றிங் கவனைவெல் வாரொரு வராயிழையே. (49)

### விருத்தம்-வலைச்சியார்.

ஆனமீ னெழுதுகொடி வேளை யென்றே
னலைசடலைச் செகினிடத்தி லடக்கிக் கொண்ட

மானமீன் விழியணிந்த திருவேட் டீசர்
மருவுசந்த வனத்தெருவில் வள்ளைக் கப்பாற்
போனமீ னிணைகாட்டிக் கூடை தன்னிற்
புலால்கமழு மீன்விற்றாய் புதுமை யன்றோ
வானமீன் பதிமுகத்திர் நின்று பேசும்
வலையினுயிர் மீன்பிடிக்கும் வலைச்சி யாரே. (50)

### பிச்சி - விருத்தம்.

தாணுமுண்டகன் மாயவன்றொழு சத்தி நாயகன் சந்த
ஞுடவி, நீணிலந்தனின் மெச்சுபிச்சியே நீற்று மெய்யினுற்
போற்று வாணியும், பூணி லங்குடற் போர்த்தகாவியாற் பொ
ருவிலாதசெந் திருவுமாய்நினைக், காணவந்தபேர் விதியை
முன்னுவார் கருதுற்றினம் விண்டுசிந்தையே. (51)

### கட்டளைக்கலிப்பா-வெறிவிலக்குதல்.

சிந்து கட்புனற் கொங்கையிற் சேரவே
திகைத்து வாடுந் தெரிவைதன் காமனோ
யந்த மேடத்துண் மால்வேதை யுந்திடு
லரிவைமீர்மற் றதுகொண்டு தீருமோ
இந்து வேணியி னுர்சண்ப காடவி
யிடபங் தங்கு மிருஞ்சோதி வானவன்
வந்து கற்பினிற் கன்னியிற் சேர்ந்தருள்
வரையிற் றீரு மதிமுக மாதரே. (52)

### வெண்பா.

மாதவனுர் தேடுவன மன்னும் பரவையெதிர்
பாதி யிரவிற் படர்வனவே - கோதிலா
நம்பரத்தர் சந்தவன நாதரிரு நாற்றிசையா
மம்பரத்தர் செம்பொன் னடி. (53)

### கட்டளைக்கலித்துறை.

அடிகாணத் தக்கவன் றெண்டர்பித்தாவென் றுமாதரித்துப்
படிகாணச் சாதனங் காட்டிமுன் னாண்ட பரமர்வெள்ளைப்
பொடிகாணு மேனிய னார்சண்ப காடவிப் புங்கவனார்
குடிகாணு நாங்க ளெமக்கொரு நாளுங் குறைவில்லையே.(54)

### விருத்தம்.

இலைபடைத்த கதலிவன மழைதொடு சந்தனவனத்தி
லிறைவன் வெள்ளி
மலைபடைத்த திருவேட்ட நாதரெனைப் பிரிவதுண்டோ
மதனு வோங்கு
மலீபடைத்த கடலுலகின் மதுத்துளிசிந் திடுமலரா
மம்பைப் பூட்டிச்
சிலைபடைத்துத் திரிவைசும்மா வேலையற்று வீணிலினித்
திரிந்தி டாயே. (55)

### தாழிசை.

ஆயுநா லுணர்ந்த வர்க்கு முக்குறும் பெறிந்திடு
மையருக்கு மமரருக்கு மரியருக்கு மரியரா
னேயமான சுந்தரர்க்கோ ரேவலாள ரானவர்
நித்தர்சண்ப காடவிக்கு ளத்தர்வந்த பவநியிற்
றாயகொன்றை தாருமென்று சொன்னதுண் டதற்கவர்
சொன்னதொன்று மறிகிலேனென் றோழிமாரு மன்பு
தாயரான பேரும்வந் தெடுத்ததொன்று மோன்றமே [டன்
தமியண்மெய் தளர்ந்துபோய்ச் சந்தம்வாடி நின்றதே.()

### வஞ்சித்துறை.

சந்த வனத்து
ரிந்து தரித்தோர்
கந்த மலர்த்தாள்
சிந்தி கருத்தே. (57)

### கலித்துறை.

தேசம் பரவுந் திருச்சண்ப காடவி சேர்ந்திருக்கு
மாசம் பரவு மதிமேவும் வேணியன் வன்றொண்டர்மே
னேசம் பரவைக்குண் டாக்கிய தூத னெடும்புவித்தோற்
றாசன் பரம னருள்புரிந் தானெம்மைத் தொண்டுகொண்டே.

### விருத்தம்.

தொண்டகங் களிகொளச் சண்டவெந் தழல் கொளீஇச்
  சுட்டவெஞ் சரமெலாம் விட்டகன் றறிவினக்
கண்டலும் புளினமும் வண்டலும் புளினமுங்
  காவிவண் டுறைகளும் வாவிவண் டுறைகளும்
எண்டுவாக் குன்றமும் பண்டுவாக் குன்றமும்
  எண்ணிலா வாரமுந் தண்ணிலா வாரமு
மண்டர்மா நியமமுந் தொண்டர்மா நியமமு
  மந்தமா வனமுமே சந்தமா வனமுமே. (59)

### கலித்துறை.

மேகத் திரளன் றிறைவர்சந் தாடவி வேதியர்செய்
யாகத் தெழும்புகை மின்னன்று கோபுரத் தொண் சுடரா
மாகத்திகழ்குரல் வீழ்நீர் மதத்தெழ வந்த விந்த்ர
நாகத்திரக்குரல் மும்மத மஞ்சிடு நஞ்செவ்வியே. (60)

### கொச்சகம்.

நஞ்சுவண்ண மானகண்டர் நாதர்சண்ப காடவியிற்
றஞ்சுவண்ண மேகரிய சுரும்பினங்கள் சூழ்நிறைந்து
மஞ்சுவண்ண நின்றமதன் மலர்வாளி பட்டுருவி
யஞ்சுவண்ண மானகொங்கை யாறுவண்ண மாகியதே. (61)

விருத்தம்.

ஆக்குந் தொழிலோர் செங்கமலத் தயனு மண்ட மனைத் தினையுங,காக்குந் தொழிலோர் திருமாலுங் களித்தங்கிருப்பா ரென்னையவர், போக்குந் தொழிலும் படைத்ததிரி புரத்தா யடியேற் கிருவினையு, நீக்குந் தொழிலை யளித்தனையே நெறி யாற்பிறப்பு மொழிவோமே. (62)

விருத்தம்-சம்பிரதம்.

ஓதரிய வதிசயம் புவியில் வருவிப்பே
னுலோகங்கள் பொடியாக்குவே
னூரனை மயின்மயிர்க் கம்பளமதாய்ச் செய்வெ
னேங்குமக வின்னேன்புடன்
காதல்விளை யத்தவ மிருந்தவதை யித்தலங்
காட்டுவே னிவைமட்டுமோ
கனகுவல யங்களுண் டெனவரப் புரிவனிவை
கடினவித் தைகளன்றுகாண்
ஆதிநான் மறையோதும் வேதன்மலர் மகளுத
னலர்முலைச் செம்பவளவா
யயிராணி கேள்வன்முத லானவா னவர்முனிவ
ராயினோ ரிவர்கடம்மில்
சீதமலி வாவிசூழ் சண்பகா டவி மேவு
திருவேட்ட நாதர்வாசற்
றிருநந்தி கைப்பிரம் படிபடா வொருவனைத்
தேடியினி முன்விடுவனே. (63)

வஞ்சிவிருத்தம்.

விடுதலி லைத்துணை மெல்லடியை
யடிய னிடத்தினி லருள்புரிவாய்

நெடிய திருப்புர நிர்மலவான்
கொடியை யுயர்த்தருள் கோமானே. (64)

வெண்டுறை.

மானுகத் திரும்பனைய கருங்கொட்டி லுறைகமஞ்சூன் வயிற்றின் மந்தி, மேனுகத் தருவளைத்து விளையாடுந் திருப் புரத்தில் மேவு மீசர், நீணுகத் துரிபோர்த்த நிமலரவர் சடை வனத்தில், வானுகத் தடனணிந்த மதுவிதழி நறுங்தொடை யல், நானுகத் தினிற்புனைய நாடியருள் கிலர்தாமே. (65)

வெண்பா-வண்டுவிடுதூது.

தாமரைக்கண் ணேர்றளிபே சந்தவனம் வாழிதழித் [சேர்
தாமரைக்கண் டாசைகொண்டேன் சந்ததமுந் - தாமரை
தோலுடையார் வண்டெளவத் தொங்கலினைச் சூடுமொரு
கோலுடையார்க் கென்மாலை கூறு. (66)

கலித்துறை.

கூறுதமிழ்ச் சண்ப காடவி வாழுமை கொண்கர்வெற்பில்
வீறு பெறுங்கையன் மன்மத பாணம் விளைந்தபுண்க
ளாறு மருங்தெனச் சொற்றனள் காணு நறுந்தழையைச்
சீறி வருங்தெவ் வழுவீர வெற்றிச் சிலையண்ணலே. (67)

விருத்தம்-மாதங்கி.

சிலைநுதற் றிருவெற் புரத்தின்மா தங்கி
திருமகள் புரத்தின்மா தங்கி
சித்தசன் கலவிக் கினிய மேனகையே
திகழ்நில வெறிக்கு மேனகையே
கொலையினைப் பயிலும் விழிகள் பானலமே
கூறுமென் மொழிகள் பானலமே

குங்குமந் திமிர்ந்த தனயுகஞ் சிலம்பே
கொழுஞ்சர ணணிவனஞ் சிலம்பே
அலர்தலை வனத்திற் றளவுமா னந்த
மலர்மன வடிவுமா னந்த
மடியிணைக் குவமை யான தாமரையே
யகல்விசும் பான தாமரையே
பொலன்றொடிக் கரத்தாற் சுற்றுவள் கூர்வாள்
புதுமது வினிற்களி கூர்வாள்
புணைகுவ ளகலத் தொளிகொள்பே ரணியே
புரிந்துட னடிப்பள்பே ரணியே. (68)

கொச்சகம்.

அணியாகப் படவரவை யணிந்தபிரா னமரர்சிகா
மணியாகிச் சந்தவனம் வாழ்திருவேட் டீசர்தமைப்
பணியார்சந் ததந்துதியார் பரம்பொருளாப் பிரமவரைத்
துணியாரெவ் விதந்தம்மைத் துடைபவனைத் துடைப்பாரே.

விருத்தம்.

பார்மேவு நரர்போலச் சுரருய்ய நின்றுவிட பானஞ்செய் தோ, ரேர்மேவுஞ் சந்தவனத் தெருவிலென்ன நடைச்சியெனு மிடைச்சி யாரே, சீர்மேவு மருந்தன்று ராயிருந்தால் வாரு மென்று செப்பாரார்தார், வார்மேவு முலையாணுங் குலமெலிய வெனத்திரிவீர் வந்து தாமே. (70)

விருத்தம்.

தானக் குவட்டி னுரிபோர்த்துத் தழல்கொப் பளிக்கு மகல்விழியாற், சரவே டணையன் றுருத்தெரித்துத் தகை சான் மருப்பு மாறேக்கி, மானக் குவட்டை யெடுத்துந்தி வனசக் கரத்தில் மணிமார்பில், வளர்செஞ் சடையிற் றரித்தவிழ

மலையிற் பிறந்து மணங்கமழு, நாவக் குவட்டுச் சிறுமருங்குனைகைவாண் முகச்சண் பகவல்லி, நாதசெழுஞ்சந் தனவனத்தினம்பதிருவேட் டீச்சுரனே, வானக் குவட்டுப் பொதியில்வரு மந்தா நிலமு மளக்கரிதா,மதவேள் கணையைந் தெனவுலகம் வழுத்து மிலக்க முடியாதே. (71)

வண்ண விருத்தம்.

முண்டக மலரிறை வண்டுள வணிபவன் முன்பறி கிலரென மறையோதுந், தண்டமி ழுதுபயில் சந்தன வனம்வரு சங்கரர் தருமய லவமாமோ, துண்டவெண் மதிநுதல் கொங்கைக டிதலைகள் துன்றின தமணிய மலையாக, வெண்டிசை முழுவது நின்றன வுருவமு மிங்கினி மருவுவ தினிதாயே. (72)

வெண்பா.

ஆயிழையோர் பாக னவனிபுகழ் சந்தவன
நாயகராட் கொண்டார் நம்புமெனைத் - தீயெனச்சொல்
கோசல நஞ்சத்திற் கொண்டுவந்தென் செய்வையினிக்
கார்சலநோந் தாரென்ன காண். (73)

கலித்துறை.

அந்தகன் மார்புதைக் குஞ்சந்த ஞட்வி யாளப்பரால்
வந்தகன் மாதெப்ப மாக்கரன் பாதத்தில் வண்மலரை
சிந்தகன் மேரு கிரியைநே ராயருச் சித்துமுன்னைப்
பந்தகன் மாதிக டீரநெஞ் சேதினம் பாடுகவே. (74)

விருத்தம்.

வேதனையருளி யுலகையுண் டாக்கி வீறுசொல் கம்பயில்லைக்கச, வேதனை முன்னே னெனப்பெரு மாலை மேலைநாட்டுடைத்தவர் பசிய், வேதனைநிகர்தோ ருமையொரு பாகர் விளைவயல் சண்பகா டவியார், வேதனை தருமென் மாலினைத் துடையார் விரைவினி லிங்குவந் தின்றே. (75)

வெண்பா.

வந்த பிறப்பில் வருபிறப்பை மாற்றுதற்குச்
சிந்தி பிறப்பில் செழுஞ்சுடரைச் - சந்த
வனத்தானைச் செம்பொன் வணத்தானை வேணி
வனத்தானை நித்த மகிழ்ந்து. (76)

கலித்துறை.

துன்னிய மும்மல முற்பவ நோயுந் தொலைந்துவிட
மன்னிய முத்தி பெறலரி தாமென்பர் வான்கங்கைகொள்
சென்னியன் சந்த வனத்தினில் வாழுஞ் சிவன்றனக்கு
மன்னிய மானபொன் மாக்கோ புரந்தொழ மன்னுமன்றே.()

விருத்தம்.

அன்றவிட மமு தாக்கி யுண்டசம்ப கவடவியி லரனெ
ன் மா துக், கின்றமுது விடமாகச் செய்தனர்செங் கயற்குல
நெட் டிலைய தாழை, துன்றமிள நீர்சிதறப் பாய்கூடல் விரும்
பினர்பொற் றொடிக்கை வேய்த்தோண், மன்றல்கமழ் குழன்
மருவா ரிவள்கூடல் விரும்பாமன் மகிழ்வர் தாமே. (78)

குறளடிவஞ்சிப்பா.

தாமக் குழல்சைவலமென்ன வாமப் புருவஞ் சிலையென்
னப், புடைபாய் விழியொரு கயலென்ன வடிவழ குளவாய்
துகிரென்ன, அணிகெழு நகையவிர் முத்தென்ன மணிமிட
றொலிவரி வளையென்னத், தடமுலை யெழிற்ரு வெற்பென்
ன மடிவரை நிரைவரு திரையென்ன, வகல்சுடி தடமர வம்
மென்னத் தகைகெழுமுழந் தாள் ஞெண்டென்ன, விருகணைக்
காலிள வராலென்னத் திருவடியிணை செழு மலரென்ன, உரு
வெய்துதலினு லகுண்டவ னூர்ந்திகழ் கொடியுயர் தவஞ்

செய்ய, வந்தா வருமழு வலன்கொடிரு வேட்ட நாயகன் மண மகிழத், தாட்டாமரைப்பூந் தடமலர்க்கட் சந்தா டவிதனிற் றேன்றினிய, கொந்தார் குழற்குனி சிலைநுதற்பைங் கொடி போலிவ்வை யகத்திலையே. (79)

ஊசல்.

இருநிறத்திணைவமாம் பலகைதன்னிலேற்றி யிருவினை யான விருபாசத்தை, வருதினமுந் திரோபவத்தா லிசைக் கவாட்டி யாடுகின்ற நாளொழிய மனமேயான, வொருபலகை தனிற்பற்றி வடத்தைப் பூட்டி யோடரிக்கட் சிலைநுதலியுமை யாளோடு, மருள்கொடுசந் தனவனத் தீராட ருச லெழுதிரு வேட்டீச ராடீ ரூசல் (80)

விருத்தம்.

ஊசலிட்ட பொற்றோடுந் திருமிடற்றிற் கண்டிகையு மொளிவெண்ணீறும், பூசலிட்ட மதனையடு நுதல்விழியும் பரவையெனும் பொற்பூமாதின், வாசலிட்டசேவடியுஞ் சந்த வனத் திறைவரென்முன் வந்து காட்டி, வீசலிட்ட மலத் தொடர்ச்சி நீங்கியழி யாதமுத்தி விதங்கண்டேனே. (81)

சுரம்போக்கு-கலித்துறை.

கண்டே யொருவன்பி னென்பேதை போகமுன் கண் டெனெனில், வண்டே தடுப்பன் கடந்தார் சுரத்தின் மலர் படுத்துக், கொண்டேமுன் செல்லுவன் சந்தா டவியினிற் கொற்றவர்முன், பண்டே தவஞ்செய்வ னேயென்ன பாவம் பழிபட்டதே. (82)

கைக்கிளை - மருட்பா.

தேனூறு மாலைதனிற் சீரடிப்பார் கூடும்விழி
மீனேறும் வள்ளையினில் வேர்க்குநுத - லானேறுஞ்
சந்தவனத் தீசர் தலத்து
வாழ்மகளெனவே. (83)

## கலித்துறை.

எந்தவி தத்திலுஞ் சந்தவனக்கா விட மேவி
யந்தி வருத்துமுன் றாதுபுகன்றிட வணிமாடச்
சந்த வனத்தினில் வாவிசுழன்றிடுந் தணிநாராய்
சிந்த விழிப்புன லாவி சுழன்றது தெரியாதே. (84)

## அகவல்.

தெரிவரும் பரமாய்ச் சின்மய மாகி
யிருமூழு துலக மெங்கணு நிறைந்து
கொண்டன னியம மாகிபன் னியமாய்
மன்னிய சோதி வடிவமா யென்று
நித்தியமாகி நிகழ்பரா பரமாய்ச்
சுத்தமாய் நிட்கள சொரூபமாய் விளங்கு
மழியாக் கைப்பொரு ளிலங்குரு வுருவாய்ச்
சேர்க்கை யுடைச்சதா சிவமெனத் தோன்றி
யோவில் சீரைந் துருவமு மெடுத்து
மூவரு மாகி முடிவிலா தோங்கும்
மாயக் கருவி வகுத்திடும் விபுல
மாயப் புவன மடங்கலும் படைத்து
மலத்தினோ டழுங்கிக் கழியறி வுயிரின்
குலத்தினை மறவினை குறித்தவைக் கேற்ப
நால்வகைத் தோற்றமு மெழுவகைப் பிறப்பின்
மேல்வரப் பட்ட விரிந்த வெண்பத்தி
னான்குநூ றாயிரம் யோனியி னண்ணு
விததிரு வினைவயத் தின்ப துன்பமுந்
துய்த்திடச் செய்து துலையா தங்ஙன்
மெய்த்திடின் மாயை யிடஞ்சூ லொடுக்கி
முத்தொழி னடத்தும் மூவர் முதல்வா

நத்தின மொலிக்க நகுநில வுமிழும்
தாளநன் மலர்தூஉய் சமுத்திரம் வணங்கி
பொருதிரைக் காத்தாற் பூசனை புரியும்
விமல புராதன வெள்விடைப் பாகா
வமரர்தந் தலைவா வையரி சிதறிக்
குடங்கையி னகன்று குழையினைத் தடவிக்
கடந்திருட் கூந்தற் கற்றையிற் பாய்ந்து
மெல்ல மீண்டழகிய மென்குமிழ் மறிகட்
கிள்ளைமென் குதலைக் கிளிநகத் தனத்துச்
சண்பக வல்லிதன் சிவ நாயகர்
சண்பக வனத்திற் றிருவேட் டீச்சுர
அத்தகை யுயிர்க்குலத் தளியனு ளொருவன்
மெத்தவு மயங்கி வேணவா நலியப்
பெற்றனன் கடல்சூழ் பேருல கதனி
லிற்றைநாள் வரையு மிழையினு நுண்ணிய
மருங்கிறு மென்ன மதர்த் திறு மாந்து
திரண்டடி பரந்து திதலைபூத் துயர்ந்து
வாரற முனிந்து மணிவடம் புனைந்து
மேருமால் வரையின் வீறிய பணைமுலை
மணந்தாழ் குழலியர்ப் புணர்ந்து பொருள்விரும்பித்
தணந்தாழ் கடலிற் றடமலை யிடத்தும்
வனத்தினுஞ் சென்று வஞ்சகம் புரிந்து
சினத்தைமேற் கொண்டு தீய்த்தொழி லாய்ந்து
மெண்ணரும் பாவ மீட்டியுஞ் சிற்சில
புண்ணியம் புரிந்தும் பொற்சுடர் மௌலி
வானவ ருலகினு மலிநிர யத்தினு
நானிட ருற்று நலத்தினை யெய்தியு
மின்னணந் திரிய வியற்றிய தன்மை
தன்னிக ரில்லாத் தண்பிறை முடித்த

னானவ னீயே மலிதரு மருட்கட
லானவ னிவ்வா றரும்படர் புரியாய்
யானெனி லென்போ லெனக்கிக லிலையா
லாய்வினை யென்னி லசத்தது போலு
மியானல் லதனை யானென வெண்ணவு
மெனதல் லதனை யெனதென வெண்ணவு
மருளிழைத் ததுமுதன் மலமென வாழிநின்
னருளினிற் சிறியே னறிந்து கொண்டனனீ
யம்பல மகற்றிச் சென்மவி டாய்கெட
நிகரிலா வுன்பத நீழலி னுளமர்ந்
திருக்க வைத்தரு ளேகமா யினியே. (85)

வெண்பா.

இனிமைமொழி மாதே யிதயத்து மாலுந்
தனிமையி னுற்சேர்வே தனையும் - வனிதைபங்கர்
மையலைத்தான் வாய்த்த மடவாரிற் சநதவனத்
தையலைப்போற் பெற்றவரார் சாற்று. (86)

கலித்துறை.

சாற்றரு நான்மறை வேதனை யீன்றதுந் தாரணியுண்
டாற்றரு விற்றுயில் கின்றது மும்பர்க் கமுதளிக்க
வேற்றரு யோகினி யானதும் பத்துரு வெய்தினதுந்
தேற்றருஞ் சந்தவனத்தினி லீசர்தஞ் செங்கையம்பே. (87)

சித்து - விருத்தம்.

செங்கலைமுன் சுந்தரர்க்குச் செம்பொன் னாகச்
செய்த செண்பகா டவியிற் றிருவேட் டீசர்
பங்கயத்தா ளகமிருக்குஞ் சித்தர் பாமிப்
பருந்துத்தி நாகத்தின் பணமுன் காட்டி.

யுங்கள்மன மெச்சவிந்த வரிதார ரத்தை
யுறைபத்து மாற்றுக்கி யுருக வைப்போ
மங்கதன்றி யினிமாயா புரியில் வெள்ளி
யழைப்பிப்போம் பசிக்குமருந் தறிகிலோமே. (88)

கலித்துறை.

அறிவே தருஞ்சொலி னளவல்லோனடி யாய்ந்திடிலுஞ்
செறிவாம் பணமுடி தான்றிருவுள்ளவன் றேடுதலு
நெறியா மெனச்சண்ப காடவிமேவிய நித்தர்தம்பாற்
குறியாமன் மாறிமுன் தேடலின் மானங் குலைந்தனனே.(89)

விருத்தம்.

தனத்திற் பிரியார் தமைப்பிரியார் தாமென் பணிவார் தொழுமடியா, ரினத்திற் பிரியார் தாமொருவ ரென்பா ரிண வண் டுலவுசந்த, வனத்திற் பிரியா ரெருக்கணிவார் மதிக்கு மெண்ணுன்கறட்வளர்க்கு, மனத்தைப் பிரியார் விடமுண்பா ரருளார் வேணிமுடியாரே. (90)

விருத்தம்.

முடிந்திடு நீளினை டம்பயில் சோதியர் முந்தியொர்சூர் முதலே, தடிந்திடும் வேலவ ரைங்கரர் தாதையர் சந்தவனத் தரனார், படிந்திடு வாரை முனிந்தெழு கொங்கை பரிந்தெழு வாரெனவுங், கடிந்திடு வார்மய லென்னவு மெண்ணியொர் கங்குல் விடிந்ததுவே. (91)

விருத்தம்.

வேணி லங்கனை வென்றவர் மாசடிலக்
கானி லிருந்து கடும்பணியே கவர்வாய்
வானி லுயர்ந்து வளர்ந்தெழு சந்தவனத்
தூனி லிருந்துயி ருணும்வெண் பிறையே. (92)

கலித்துறை.

வெம்பா ணணியண்ட சாலமெல் லாமுண்ட வீண்டுவையே
தம்பாண மாக்கொண்ட சந்தா டவியிற் றனிப்பரத்தைச்
செம்பாண னேர்விழிச் சேரிப் பரத்தையிற் சேர்ந்தனையே
யைம்பாண னுக்குறவாயுன் கேண்மை யகன்றனமே (93)

விருத்தம்.

அனத்தின் புடைய வருந்தேனே யரிய தடக்கணாந் துறையே
புனத்தின் மாதர் வழங்கலரே பூவார் கண்ட புள்ளினமே
மனத்திற் கரையார் நம்மணலே மதனம் படவே யிரங்கலையே
தனத்தி னகன்ற மணக்கலமே சந்த வனத்தார் வரவழையே. ()

விருத்தம்.

வழையே குடிகொள் மதுகரங்காள் வளஞ்சேர் சந்த வனத்தவர்நே, ரிழையே யிருக்கு மிடப்பாக ரேன்னைப் பிரி ஞான் றெழில்மதனே, யழையே லெனயா னுரைத்திடினு மழைக்குங் குயில்க ளஞ்சவிசும், புழையேதவழ்கார்க் கெண் ணிமித்தம் போந்து புகல்வீ ரொருமொழியே. (95)

சந்தவிருத்தம்.

ஒருகா லெழுந்துவரி யிருகால் தளர்ந்துவிடு முமைபா கர் சந்தவனமும்,விருகா லெழுந் துவிழு மலர்வாவி யின்கணு ள விரையே யருந்துகுருகீர், வருகா லெழுந்தவர்த மெதிர் போய் வணங்கிடுமென் மயல்கூறி நின்றுமகலா, தருகாண் மகிழ்ந்துகொடெ னெதிர்வாரு மின்குருகு தமியே னரந்தை கெடவே. (96)

வெண்பா.

கெடலரிய முத்தி கிடைக்கநெஞ்சே தாழ்வாய்
தடவயல்சூழ் சந்தவனத் தானை - நெடியவரை

வில்லையுளான் பொன்னடியை மேவினர்க்குச் செம்பொன்வ
ரை, யில்லையெனு நான்மறைகளே. (97)

## கொற்றியார்-விருத்தம்.

மறைநாம மாயிரத்தாய் கடவுண்மேரு
மலைகுழைத்தா யெனச்சால வழுத்தா நிற்கு
மிறைநாம மூவிலைவேற் படையி னீசர்
விரைகொன்றைஞ் சந் தனவனத்தி லிரங்கும் வாவி
துறைநாம மகரத்தில் வந்தோங் காணீர்
தோய்ந்துதிரு வாய்மொழியைச் சொல்ல வேண்டும்
பிறைநாம நெற்றியா ரென்றுசொல்லு
மொற்றியா ராகிவருங் கொற்றி யாரே. (98)

## கலித்துறை.

கொற்றவர் போற்றுந் திருப்புரத் தீசரைக் கூறுமறை
கற்றவர் மூலப் பொருளொன்று சிந்திப்பர் காசினியைப்
பெற்றவர் சென்னியுண் பாத்திர மானதும் பேய்முலையுண்
மற்றவ ரூர்விடை யானதுந் தேர்ந்து மனந்தெளிந்தே. (99)

## விருத்தம்.

தெளிதரு செந்தமிழ்மூவர்கோன் தெரிவனகம் புறமெ
ங்கணுந், தளிதரு கார்தவழ் சோலைசூழ் சந்தவனத் தினின்
மங்கைமார், களிதருசிந்தையின் மாரவேள் கணைகளி னலமர்
செய்வது, மெளிதருமையலு முள்ளத்து ளெண்ணியிரங்
கில ரென்னையே. (100)

## கலித்துறை.

என்னைமுன் னவர்முன்னேதி முடிக்கு மிருஞ் சங்கமோ
வன்னைமுன் னளினி ரமு திந்த வருஞ் சங்கமோ
பொன்னைமுன் காத்தருள் சந்தவனேசர்தம் பொற்பதத்திற்
கொன்னைமுன் னார்த்தருவேலவர் தேர்முன் குறித்தசங்கே.()

வெண்பா.

குறித்தசங்க மாலிடையார் கோலப் பவனி
பறித்தசங்க மத்தனையும் பாராள் - தறித்தசங்கம்
போகமதி யன்னையற்கு புத்தியிலை பின்னையென்
மோகமதிற் றோய்ந்து மொழி. (102)

விருத்தம்.

மொழிகூறிப் பண்ணைவிற்பீ ரழகின்மல ரகத்திதனை
முனிந்து விற்பீர்
பழிகூறற் கருந்துகிலா லவைமறைத்த திலைக்கறிகள்
பகர்வீர் முத்தி
வழிகூறுஞ் சிவபெருமான் சந்தவன வீதியிலே
மதர்த்து நீண்ட
விழிகூறி வள்ளையிணைக் காட்டியிடு வீர்சொல்லி
மேவு வீரே. (103)

சந்தவிருத்தம்.

வீரமேவுமழ வாளர்சந்தவன விமலர்மேருமலை வில்லினால், வெய்யமூவெயிறு மெய்யுமையர்பெறு விருதுபாடி வருகளியரே, மாரமேவுதன பாரமங்கையினி லணிமடந்தையெழு கங்கையா, ரருகுசூடுசிவ காமிவாமிமத மறிகலாதவர் வராமலே, பாரமேவியசு வாடமேயடைவ தீட்டனார் கடவுளைப்பரி, வாரமேதரு வியாதர்முன்மறைகள் பார்ப்ப ரெவ்வுயிரிடத்தினும், வாரமேவிய சனுசியர்தடிகள் வண்கைகொண்டருள் விடவரும், வாசியார்கரு மும்மடங்கதிகம் வைத்திருப்பீர்படை முத்தியே. (104)

விருத்தம்.

முத்தன் முத்தமிழைப் புரிந்தவன் புரிந்து முனிக்கண
மதிப்பவன் மதிரோர், வத்திரன்வத்து வானவன் வானோர்

வானமுந்துதவுகோன்மாரன், அத்தனத் திரனுமரியுளோனரி
யுளாரமே யாரமா வனத்தின்,வித்தகன் வித்தை முழுதுணர்
விபுதன் விபுதனக் கொப்பிலைப் பிறையே. (105)

தாழிசை.

இறைவர்தூய செம்பொன்மேனி தனிநிறைந்த பூதியா
ரெண்ணிலண்ட முடியுளாரு மீறிலாத சோதியார்
மறைகளோது தவளமாட மழைகிழித்த திருபுரம்
வாழுநம்ப ரென்னைவந்து மருவிலாரி தென்சொல்வேன்
குறையிலாத மாதரீர் மகோததிக்குள் வடவையின்
கொழுதில்வீறு தென்றலின் கொழுந்தெழுந்து சுடுமென
வறைகண்மேவு மணியிலிட்ட கதவடைத் தொதுங்கினே
னங்குமாரன் போர்துடங்கி லாருமென்ன செய்வரே. (106)

விருத்தம்.

செய்ய தன்மகட் டிருவினுக் கருள்
செய்த தேவரென் றன்னி நாடொறுந்
துய்ய முத்தமு மைய நக்கமுந்
துகிலினங்களுந் திரையெ னுந்தருங்
கையரிக் கொடார் சண்ப காடவி
கர்த்த ரென்னைவாழ் வித்த நித்தரை
வைய கத்தின்மே லார வாரமாய்
வந்து தண்புனல் சிந்து மென்னையே. (107)

கலித்துறை.

சிந்திப்பர் வேறொரு தெய்வமுண் டென்று தினந்து
வந்திப்பர் தாமென்ன கண்டிலரோவந்து மாநகரி
லிந்தக் கடவுளும் பூதமுந் தாமன்றி யில்லையென்
யந்திப் பிறைமுடிச் [illegible]ந்ததுவே. (108)

வெண்பா.

வேதக் குடத்தினையும் வேதனையு மாற்றுவித்துக்
கோதற்ற கீர்த்தியுருக் கொண்டதே - மாதவனும்
மாணகத்தா நேயர்களும் வந்திக்குஞ் சந்தவன
நீணகத் தாற்கடையு நீர். (109)

வாழி.

ஒருமைவே தாக மங்க ளுரைக்குநா லனைத்தும் வாழி
திருமயில் தவம்புரிந்த சண்பகா டவியும் வாழி
பெருமையாந் திருவேட்டீசர் பெருசிறக் கலம்ப கத்தை
அருமையாய்ப் படிப்போர் கேட்போ ரனைவரும் வாழிவாழி.

முற்றிற்று.